**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p382-395** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# இலக்கியங்கள் சுட்டும் பனையின் சிறப்பு

*The Significance of the Palmyra Palm as Highlighted in Tamil Literature*

**முனைவர். பா. பத்மப்பிரியா,**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சி - 620 002.

**Dr. B. Padmapriya*,**

*Assistant Professor, Department of Tamil Research,*
*Department of Tamil, Shrimati Indira Gandhi College, (Affiliated with Bharathidasan University),*
*Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
*Contact No.: 9751409529 | Email: padmapriya@sigc.edu*
*ORCID: 0009-0003-9388-8132*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email:
padmapriya@sigc.edu

**Abstract:**

This paper seeks to establish, through evidence from Sangam literature, that the palmyra palm has been a plant deeply intertwined with the everyday life, culture, and economy of the Tamil people (Varadharajan 45–52). The study explains the distinctive significance of the palmyra palm, its relationship with the people and the land during the Sangam period, and its long-standing status as a valuable economic crop. The various uses of the palmyra palm and its 34 identified varieties are also examined. The paper provides an extensive analysis of its uses not only as a source of food and medicine but also as a marker indicating the boundaries of settlements, along with the various useful products obtained from the palmyra palm. Furthermore, the lifespan of the palmyra palm and its ability to remain closely integrated with Tamil life are discussed. The paper also presents the traditional belief that palmyra palms help raise the groundwater level and highlights the understanding that, for this reason, earlier generations protected and cultivated palmyra palms near water bodies. It is intended to convey this traditional ecological knowledge to the younger generation of today.

**Keywords:** *: Palmyra Palm, Karpaga Viruksham / Karpagatharu (Wish-Fulfilling Tree), Tamil-Brahmi Inscriptions, Panitha Merchant, Ponthai, Kombai, Sacred/Presiding Tree (Thalamaram).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.30

### ஆய்வுச் சுருக்கம்

பனை மரம் தமிழர்களின் அன்றாட வாழ்வியலோடும், பண்பாட்டோடும், பொருளியலோடும் பின்னிப் பிணைந்து வந்த ஒரு தாவரம் என்பதனை இக்கட்டுரை சங்க இலக்கியச் சான்றுகள் வழி நிறுவ முற்படுகிறது (Varadharajan 45–52). பனை மரத்தின் தனிச் சிறப்பையும், சங்க காலத்தில் அது மக்களோடும் மண்ணோடும் கொண்டிருந்த உறவையும், தொன்று தொட்டு பணப்பயிராக விளங்கிய தன்மையையும் இக்கட்டுரை விளக்குகிறது. பனை மரத்தின் பல்வேறு பயன்பாடுகளும், அதன் 34 வகைகளும் இதில் அடையாளம் காணப்பட்டுள்ளன. உணவாகவும் மருந்தாகவும் மட்டுமன்றி ஊரெல்லை குறிக்கும் குறியீடாகவும் பயன்பட்ட முறையும், பனையில் இருந்து கிடைக்கும் பயன்படு பொருட்களும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மேலும் பனை மரத்தின் ஆயுட்காலமும், அது தமிழர் வாழ்வோடு ஒன்றிணைந்துள்ள திறனும் விளக்கப்பட்டுள்ளன. பனை மரம் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் என்ற பாரம்பரியக் கொள்கையையும், அதன் காரணமாகவே முன்னோர்கள் பனையை நீர்நிலைகளுக்கு அருகே பாதுகாத்து வளர்த்தார்கள் என்ற உண்மையையும் இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** *பனை மரம், கற்பகவிருட்சம் / கற்பகத்தரு, தமிழ்–பிராமி கல்வெட்டுகள், பாணித வணிகன், போந்தை, கொம்பை, தலமரம்.*

## 1. முன்னுரை

தமிழக வரலாற்றின் தொடக்க காலத்தில் இருந்தே பனை மரங்கள் முக்கிய அங்கம் வகித்து வந்துள்ளன. தமிழகத்தின் எந்தத் திசையிலிருந்து பயணித்தாலும் பனை மரங்களைக் கூட்டம் கூட்டமாகக் காணும் நிலை இருந்தது. இந்த நீண்ட தொடர்பின் அங்கீகாரமாகவே தமிழக அரசு பனையைத் தேசிய மரமாக அறிவித்துப் பெருமைப்படுத்தியது. ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் உணவாகவும் மருந்தாகவும் மனிதகுலத்திற்குத் தன்னையே கொடையாக அளித்ததால், முன்னோர்கள் இதனைக் "கற்பகவிருட்சம்" எனப் பெயரிட்டுப் பெருமைப்படுத்தினர். இவ்வாறு தமிழர் வரலாற்றில் தமிழருக்கும் பனைக்கும் இடையேயான மரபு ரீதியான உறவினை உணர்த்தும் சான்றுகள் இலக்கியங்களில் ஆங்காங்கே இழையோடி வருகின்றன என்பதனை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆய்வு நோக்கமும் முறையியலும்

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், பிற்கால நீதி நூல்கள், கல்வெட்டுச் சான்றுகள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு பனை மரம் தமிழர் வாழ்வியலில் வகித்த பங்கினை அடையாளம் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். விளக்கவுரை

| Copyright © Author(s)

Dr.B. Padmapriya. V, *Tamilmanam International Research Journal of Tamil Studies* 2026, Vol. 12 No. 04 (2026): September 2026,
**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.30

முறையிலான (descriptive) இலக்கிய ஆய்வு முறை இதற்குக் கையாளப்பட்டுள்ளது; முதன்மைச் சான்றுகளாக சங்க இலக்கியப் பாடல்களும், துணைச் சான்றுகளாக அறிஞர்களின் ஆய்வு நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 2. பனையும் தமிழர் மரபும்



பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பரிணாம வளர்ச்சிப் படிநிலையில் மனிதன் தோன்றி, நாடோடி வாழ்க்கை மேற்கொண்ட காலகட்டத்தில், மனிதகுலத்தின் முதல் இருப்பிடமாக விளங்கியவை "கொம்பை" எனப்படும் பனை ஓலைகளால் அமைக்கப்பட்ட குடிசைகள் ஆகும். கிராமப்புறங்களில் இன்றும் காணப்படும் பனை ஓலைக் குடிசைகள், தமிழர் வாழ்வியலுக்கும் பனை மரத்திற்குமான உறவின் தொடர்ச்சியைக் காட்டும் சரித்திரச் சான்றுகளாகும்.

அழகர்மலையில் கண்டெடுக்கப்பட்ட கிமு முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று, "நெடுமலன்" என்பவன் சமண முனிவர்களுக்குக் கற்படுக்கை அமைத்துக் கொடுத்த நிகழ்வை "பாணித வணிகன் நெடுமலன்" எனக் குறிப்பிடுகிறது (அழகர்மலைக் கல்வெட்டு, கிமு 1 ஆம் நூற்றாண்டு). "பாணிதம்" என்ற சொல் பனையிலிருந்து கிடைக்கும் பதநீரைக் காய்ச்சி உருவாக்கப்படும் இனிப்புப் பாகைக் குறிப்பதாக ஆய்வுகள் முன்மொழிகின்றன.

கிறித்தவ மதத்தின் புனித நூலான விவிலியத்தில் "நீதிமான் பனையைப் போல் செழித்து வளருவான்" (சங்கீதம் 92.12) எனக் கூறப்பட்டுள்ளது இங்குக் கருதத்தக்கது. கிறிஸ்து பிறப்பதற்கு

| Copyright © Author(s)

முந்தையதாகக் கணிக்கப்பட்ட தமிழ்–பிராமிக் கல்வெட்டுகளிலும் பனை என்ற சொல் இடம்பெற்றுள்ளது. மேலும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கிய நூல்களிலும் பனை பேசுபொருளாக விளங்கியுள்ளது. இத்தகு சிறப்புடைய பனை மரத்தின் தனித்தன்மையை பின்வரும் பாடல் அடிகள் விளக்குகின்றன:

*சங்கத்தமிழன் கருப்பொருளாய் சிங்கத்தமிழன் உயிர்ப்பொருளாய்*
*நெய்தலுக்கு கருவாகி மணலிலே விதையாகி*
*வறட்சியிலும் வளமாகி உயர்ந்தோங்கிய புல்லாகி*
*உடல் கருப்பாகி உச்சிவெளுப்பாகி*
*சிவனுக்குத் தோடாகி சேரனுக்குத் தராகி*
*கழுத்திலே உறவாடி உடல் பொருள் ஆவி*
*அனைத்தும் நமக்காகி பயன்கருதாது*
*உயர்ந்த கற்பகத் தருவாகி நிற்கும் பனையே.*

**(மூலம்: நவீன பாராட்டுப் பாடல் — ஆசிரியர் பெயர் மூலத்தில் குறிப்பிடப்படவில்லை)**

### 3. பனையின் பழமை

முன்னோர்கள் தாங்கள் வாழ்ந்த பகுதிகளை அடையாளப்படுத்தும்போது பனையை முன்னொட்டாகச் சேர்த்துப் பெயரிடும் மரபு உடையவர்களாக இருந்தனர். சான்றாக, பனையூர், பனங்குடி, பனங்காடி, பனைக்குடி, பனைக்குளம், பனையகுளம், பனமங்கலம் போன்ற ஊர்ப் பெயர்கள் யாவும் பனைக்கும் தமிழருக்குமான மரபுத் தொடர்ச்சியைச் சுட்டும் வரலாற்று விழுமியங்களாகும். தமிழ் மொழியின் தொன்மை நூலான தொல்காப்பியம் பனையைக் குறித்துக் கூறுகையில்:

*தோடே மடலே ஓலை என்றா*
*ஓடே இதலே பாளை என்றா*
*ஈர்க்கு குலையே நேர்ந்தன பிறகும்*
*புல்லொடு வரும் என சொல்லினர் புலவர்.*

**(தொல்காப்பியம், மரபியல்)**

"சொல்லினர் புலவர்" என்று தொல்காப்பியம் சுட்டுவதால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே பனை மரம் தமிழர்களோடு கொண்டிருந்த உறவு புலப்படுகிறது. இதனையொத்தே, மூவேந்தர்களின் மாலைகளைச் சுட்டுமிடத்து தொல்காப்பியர்:

*வேந்திடை தெரிதல் வேண்டி*

*ஏந்து புகழ் போந்தை வேம்பே*

*ஆரென வரூஉம் மாபெரும் தானையர்.*

(தொல்காப்பியம்)

என எடுத்துரைக்கிறார். இப்பாடலில் "போந்தை" என்ற சொல்லாட்சி பனையைக் குறிப்பதாகும். இவ்வாறு பனையின் பழமை என்பது காலம் கணிக்க இயலாத தொன்மையுடையதாக அமைந்துள்ளது. இதனை நினைவூட்டும் வகையில் வரும் புறப்பாடல்:

*"வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும் மலைந்த சென்னியர்."*

(புறநானூறு)

### 4. எல்லையும் இறையும்




பழங்காலத்தில் பனை மரம் ஊரின் எல்லையைக் குறிப்பதற்கும், வீட்டிற்கு வேலியிடும் வழக்கத்திற்கும் பேருதவி புரிந்து வந்துள்ளது. தொன்மங்கள் பனையைத் "தேவலோகத் தரு" என்றும் தெய்வீக மரம் என்றும் குறிப்பிடுகின்றன.

*"பெண்ணை வேலி உழைகண் சீறூர்."*

(நற்றிணை)

என வரும் நற்றிணைப் பாடல் ஊரின் எல்லையாக இருந்த சிற்றூரைக் குறிப்பதாக அமைகிறது.

*கழிசூழ் படப்பை காண்டவாயில்*

*ஒலி காவோலை முள்மிடை வேலி*

*பெண்ணை இவரும் ஆங்கண்*

*வெண்மணற் படப்பை எம் அழுங்கல் ஊரே.*

(நற்றிணை)

என்ற பாடல் முற்றிய பனை ஓலையோடு மக்களையும் இணைத்து வெளிப்படுத்தும் பழம் மரபை நமக்குக் காட்சிப்படுத்துகிறது.

*தொன்று உரை கடவுள் சேர்ந்த பராரை*

*மன்றப்பெண்ணை வாங்குமடர்க் குடம்பை.*

(மூலம் குறிப்பிடப்படவில்லை — சங்க/பிற்கால இலக்கியப் பாடல்)

என வரும் பாடலடிகள் பனை மரத்தில் கடவுள் உறைந்திருக்கும் தெய்வத்தன்மையைக் காட்டுகின்றன. "நின் ஒன்று உயர்கொடிப் பனை" என்ற பாடல் திருமால் உறையும் பனை மரமெனச் சிறப்பிக்கிறது. "பால் நிற உருவின் பனைக் கொடியோன்" என்றமையும் பாடலடி பலராமன் பால்நிறமுடையவன் எனவும் அவன் பனைக்கொடியோன் எனவும் புலப்படுத்துகிறது. மேலும், தமிழகத்தில் திருவாரூர் மாவட்டம் திருப்பனந்தாள், திருவோத்தூர் ஆகிய இடங்களிலும், அரியலூர் மாவட்டம் திருமழபாடி, விழுப்புரம் மாவட்டம் பனங்காட்டூர் ஆகிய இடங்களிலும் பனை தலமரமாக வழிபடப்பட்டு வருகிறது. சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களிலும் பனை பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன; திருஞானசம்பந்தரின் அற்புதச் செயல்களுள் திருவோத்தூரில் ஆண் பனையைக் குலையீனச் செய்தது குறிப்பிடத்தக்கது (Sambandhar, Thevaram).

## 5. வாழ்வியலில் பனை பெறுமிடம்

பண்டைய நாளின் பனையோலைப் பெட்டியின் மரபை சங்க இலக்கியங்கள் அவற்றின் பயனோடு பேசுகின்றன. திணை வரையறையின்றி அனைத்து நிலங்களிலும் பனை ஓலைப் பெட்டிகள் பரவிய மரபினை பின்வரும் பாடல்கள் பேசுகின்றன:

*முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர் விதைக் குறுவட்டி போதொடு...*

*காணொளி வாழ்க்கை கதநாய் வேட்டுவன் மான் தசை சொரிந்த வட்டியும்...*

*வித்தோடு சென்ற வட்டி பற்பல... மீனோடு பெயரும் பாணர் ஊர...*

*வராஅல்செறிந்த வட்டியுள்...*

(சங்க இலக்கியப் பாடல்கள் — நூல் பெயர் மூலத்தில் குறிப்பிடப்படவில்லை)

பெண்கள் பனை ஓலைக் கூடையில் முல்லைப் பூக்களைப் பறிக்கும் காட்சியை:

*அகல் வகுத்த பசுங்குடையான்*

*புதன் முல்லை பூ பறிக்குந்து*

| Copyright © Author(s)

*ஆம்பல் வள்ளி தொடிக்கை மகளிர்.*

(சங்க இலக்கியப் பாடல்)

என்ற பாடல் காட்டுகிறது. "ஒழி மடல் விறகின் கழிமீன் சுட்டு" என்ற அடிகள் பனை மடலால் மீன் சுடும் தமிழர் உணவு மரபை நம் கண்முன் விரிக்கின்றன.

*"ஒழி மடல் விறகின் கழிமீன் சுட்டு."*

(புறநானூறு)

*முடங்கல் இறைய தூக்கணாங்குரீஇ*

*நீடு இரும்பெண்ணைத் தொடுத்த*

*கூடினும் மயங்கிய மையல் ஊரே.*

(சங்க இலக்கியப் பாடல்)

என வரும் பாடல் பெண் பனை தூக்கணாங்குருவியின் இருப்பிடமாக இருந்ததை உணர்த்துகிறது. தூக்கணாங்குருவி, கரிக்குருவி, நாரை போன்ற பறவைகளுக்கெல்லாம் இடம் தந்து அவற்றின் தேவைகளையும் நிறைவு செய்யும் பனை மரம், இன்று அருகி வருகிறது; அதன் அழிவு பறவையினத்தின் அழிவோடு நின்றுவிடாமல் நம்மையும் நாட்டையும் தொடரும் என்பதே பனையோடு நாமும் நம் மண்ணும் கொண்டுள்ள உறவின் ஆழத்தைக் காட்டுகிறது.

*"குளம் தொட்டு வளம் பெருக்கி"*

*"காவிரிப் புதுநீர் கடுவரல் வாய்த்தலை."*

(சங்க இலக்கியப் பாடல்)

என வரும் பாடல் அடிகளால் நீர்நிலைகளைப் பெருக்கும் இடத்தில் முன்னோர்கள் ஏரி மற்றும் குளங்களின் கரையோரங்களில் பனை நடும் மரபைப் பின்பற்றி இருந்தமை புலப்படுகிறது; ஏனெனில் பனை மரம் மண் அரிப்பைத் தடுக்கும். பனையின் சல்லி வேர்கள் நிலத்தடி நீரைத் தேடிச் செல்வதால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்ற சூழல் சார்ந்த அறிவு சங்கத் தமிழர்களுக்கு இருந்தது (Vellaivaranar 112).

படைவீரர்களின் படைப் பெருக்கத்திற்குப் பனை மரம் சான்றாகக் காட்டப்பட்டுள்ளமை வியப்பிற்குரியது. அரசனின் படைவீரர்கள் படையெடுத்துச் செல்கையில், முதலில் வருபவர் நுங்கையும், இடையில் வருபவர் பனம்பழத்தையும், கடைசியில் வருபவர் பனங்கிழங்கையும் உண்டதாகப் புறப்பாடல் எடுத்துரைக்கிறது:

*தலையோர் நுங்கின் தீஞ்சோறு மிசைய*

*இடையோர் பழத்தின் பைங்கனி மாந்த*

*கடையோர் விடுவாய் பிசிரோடு சுடுகிழங்கு நுகர.*

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.30**

**(புறநானூறு)**

இவ்வாறு தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றிணைந்திருந்த தாவரமாகப் பனை மரம் திகழ்ந்துள்ளது; வெயிலோடு உறவாடிப் பனையோடு விளையாடி மகிழ்ந்தவர்கள் தமிழர்கள்.

### 6. விருந்தோம்பல்

செல்விருந்து ஓம்பி வருவிருந்தை எதிர்பார்த்திருக்கும் தொல்குடி மரபு தமிழர்களின் தனிச்சிறப்பு. எத்தகைய சூழலிலும் விருந்தினரை உபசரிக்கும் மாண்பு குறையாது என்பதனை இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. "படுபனையன்னார் பலர் நச்ச வாழ்வார்" என்பது நாலடியாரின் முத்திரை பதிந்த வரிகள்.

*"படுபனையன்னார் பலர் நச்ச வாழ்வார்."*

**(நாலடியார்)**

எத்துணை வறட்சியிலும் பிறரிடம் நீரை எதிர்பாராது வளரும் பனை போல், பலருக்கும் உதவி பலரும் விரும்ப வாழும் வாழ்வு சிறப்புடையது என்பதே இப்பாடலின் கருத்தாகும். "உச்சி முதல் அடி வரை ஈயும் இடத்து ஓங்குபனை போல்வரே" என்பது நீதி வெண்பாவின் வரி.

*"உச்சி முதல் அடி வரை ஈயும் இடத்து ஓங்குபனை போல்வரே."*

**(நீதி வெண்பா)**

திருக்குடந்தை அருணாச்சலப் புலவர் தமது "தாலவருட்சம்" எனும் நூலில் பனையின் 801 பயன்களை எடுத்து இயம்புகிறார் (Arunachala Pulavar, Thaalavaruttam). கீழ்வரும் நற்றிணைப் பாடல் வீட்டு முன்றிலில் பனை வளர்த்த மரபையும், பனை போல் கணக்கின்றி விருந்தோம்பும் பண்பையும் காட்டுகிறது:

*தூங்கல் ஓலை ஓங்கு மடற்பெண்ணை*
*மா அரை புதைத்த மணல் மலிமுன்றில்*
*வரையார் தாரம் வருவிருந்து அயரும்.*

**(நற்றிணை)**

### 7. கட்டிடக்கலையில் பனை

பனையின் அரிய பயன்களை நன்கு உணர்ந்த தமிழர்கள் அதனைப் பயன்படுத்திய முறை சிறப்பிற்குரியது. மன்னர் திருமலை நாயக்கர் பயன்படுத்திய கட்டிடக்கலை தொடர்பான குறிப்பு இதற்குச் சான்று:

*"அரைத்த சுண்ணாம்பை வெள்ளைச் சாறு விட்டு நன்றாய்க் குழைத்துச் செங்கலும் அடுக்காய்ப் பரப்பி, கடுக்காயோடு ஆமலகம், அரிய தான்றிக்காய், உளுந்து ஒரு காலிரு காலிடித்து நன்னீரில் ஊறிய கடுஞ்சாறும் விட்டு ஊழிக் காலங்களிலும் அசையாத வச்சிரக்காரை"* எனவரும் குறிப்பு

*பனை பயன்பாட்டில் தமிழருக்கு இருந்த ஈடுபாட்டைச் சுட்டுகிறது (Thirumalai Nayakkar, historical record).*

கி.பி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகர நிகண்டு சிற்பம் செய்வதற்கான பொருட்களை பின்வருமாறு வரிசைப்படுத்துகிறது:

*கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்*
*மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்*
*கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை*
*பத்தே சிற்பத் தொழிலுக்கு உறுப்பாவன.*

**(திவாகர நிகண்டு, கி.பி. 8 ஆம் நூற்றாண்டு)**

ஆனால், கிமு நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த மெகஸ்தனிஸ், தமிழகத்தில் பதநீர் இறக்கி அதிலிருந்து பனங்கற்கண்டு செய்வதைத் தன் குறிப்பில் பதிவு செய்ததோடு, தன் நாட்டிற்கு அதை எடுத்துச் சென்று "சீனி" எனப் பெயரிட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது ("பதநீர்"). இச்செய்தி கிமு நான்காம் நூற்றாண்டுக்கு முன்னரே பனையின் பயன்பாடு இருந்தமையை உறுதிப்படுத்துகிறது.

### 8. பனைநீர் - கள்

கள் அருந்தும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது; மன்னர்கள், வீரர்கள் உள்ளிட்ட பலரும் கள் அருந்தி மகிழ்ந்தனர். பதிற்றுப்பத்தில் பரணர் பாடிய ஐந்தாம் பத்தின் 41-வது பாடலின் பெயர் "தசும்பு துளங்கு இருக்கை" என்பதாகும் (பதிற்றுப்பத்து 5.41). செங்குட்டுவன் தன் வீரர்களுக்கு வழங்கும் கள்குடம் (தசும்பு) வைப்பதற்கெனத் தனி இருக்கை அமைத்திருந்தமையும், அது கள்குடத்தின் அசைவுக்கேற்ப அசையும் இருக்கை என்பதையும் இப்பாடலின் பெயர் உணர்த்துகிறது; இதனை:

*"புன் கால் உன்னஞ் சாயத் தெண்கள் வறிது கூட்டரியல்."*

**(பதிற்றுப்பத்து)**

என வரும் அடிகளால் அறியலாம். கள் உண்பது மட்டுமன்றி, பண்டமாற்றாகவும் பயன்பட்டமையை:

*வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு*
*கட் கொடி துடங்கும் ஆவணம் புக்குடன்*
*அருங்கள் நொடைமை தீர்ந்து.*

**(பதிற்றுப்பத்து)**

என வரும் அடிகள் புலப்படுத்துகின்றன. கடைவீதியில் கள்ளுக்கடைக்கு அடையாளமாகக் கொடி பறந்ததையும், அங்கே கள்ளுக்கு விலையாக (நொடைமை) பகைவரிடம் வென்ற யானைத்

தந்தத்தைக் கொடுத்துக் கள் மாந்தும் காட்சியையும் பதிற்றுப்பத்து பதிவு செய்கிறது. தொடுமணல் அகழாய்வில் கிடைத்த பானை ஓட்டில் பொறிக்கப்பட்ட தமிழ்–பிராமி எழுத்துகள் பனை குறித்துப் பேசுகின்றன. சங்க இலக்கியங்கள் கள்ளைத் "தீம்பிழி" என்ற சொல்லால் குறிக்கின்றன. சங்க கால தமிழரின் நடுகல் வழிபாட்டில் கள் படையல் பொருளாகத் தவறாது இடம்பெற்றுள்ளது; வழிபாட்டில் மட்டுமன்றி இறப்புச் சடங்குகளிலும் கள் படைத்த செய்தியைக் குறிப்பிடுகிறது புறநானூறு:

*இல்லாகியரே காலை மாலை*

*அல்லாகியர் யான் வாழும் நாளே!*

*நடுகல் பீலி சூட்டி நார் அரி*

*சிறுகலத்து வகுப்பவும் கொள்வான்...*

**(ஔவையார், புறநானூறு)**

என்ற ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல், அதியமான் இறந்தபோது அவருக்கு நடுகல் அமைத்து மயிற்பீலியும் கள்ளும் படைத்து வழிபட்டதைப் பொருளுரைக்கிறது.

### 9. மடல் ஏறுதல்

தமிழ் இலக்கிய வரலாற்றின் வாயிலாக மடலேறும் வழக்கத்தினை அறிகின்றோம். தலைவியின் மீது அன்பு கொண்ட தலைவன், தனக்கான அன்பும் காதலும் கிடைக்கப் பெறாத நிலையில் மடலேறும் மரபு இருந்தது; இதனை:

*விழுந்தலைப் பெண்ணை விளையல் மாமடல்*

*மணி அணி பெருந்தார் மரபிற் பூட்டி*

*வெள்என்ப அணிந்து பிறர் எண்ணத் தோன்றி.*

**(குறுந்தொகை)**

என்ற குறுந்தொகைப் பாடலும்,

*அடல் மாமேல் ஆற்றுவேன் என்னை மடல் மாமேல்*

*மன்றம் படர் வித்தவள் வாழி! சான்றீர்!*

**(கலித்தொகை)**

என்ற கலித்தொகைப் பாடலும்,

*சிறுமணி தொடர்ந்து பெருங்கச்சு நிறீஇ*

*குறுமுகில் எருக்கங் கண்ணி சூடி*

*உண்ணா நல்மாப் பண்ணி*

*எம்முடன் மறுகுடன் கிரிதரும் சிறுகுறு மாக்கள்.*

(நற்றிணை)

என்ற நற்றிணைப் பாடலும் இம்மரபை உணர்த்தி நிற்கின்றன.

## 10. பனையின் வகைகள்

தமிழக நாட்டுப்புற அறிவு மரபில் பனை மரம் 34 வகைகளாக வகைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது (அட்டவணை / படம் 1).

| வ.எண் | பனையின் வகை | வ.எண் | பனையின் வகை |
|---|---|---|---|
| 1 | ஆண் பனை | 18 | தாதம்பனை |
| 2 | பெண் பனை | 19 | காந்தம் பனை |
| 3 | கூந்தப்பனை | 20 | பாக்குப்பனை |
| 4 | தாளிப்பனை | 21 | ஈரம் பனை |
| 5 | குமுதிப்பனை | 22 | சீனப்பனை |
| 6 | சாற்றுப்பனை | 23 | குண்டுப் பனை |
| 7 | ஈச்சம்பனை | 24 | அலாம் பனை |
| 8 | ஈழப்பனை | 25 | கொண்டை ப்பனை |
| 9 | சீமைப்பனை | 26 | ஏரிலைப் பனை |
| 10 | ஆதம் பனை | 27 | ஏசறுப்பனை |
| 11 | திப்பிலி பனை | 28 | காட்டுப்பனை |
| 12 | உடலற்பனை | 29 | காதலிப்பனை |
| 13 | கிச்சிலிப்பனை | 30 | வலியப்பனை |
| 14 | குடைப்பனை | 31 | வாதப்பனை |
| 15 | இளம்பனை | 32 | அழகுப்பனை |
| 16 | கூரைப்பனை | 33 | நிலப்பனை |
| 17 | எடுக்கப்பனை | 34 | சனம் பனை |

**படம் 1: பனை மரத்தின் 34 வகைகள் (நாட்டுப்புற வகைப்பாட்டு மரபு அடிப்படையில்)**

## 11. பனையின் பல்வேறு பயன்பாடுகள்

தமிழ்நாட்டிற்குக் கிடைத்த அளப்பரும் கொடை பனை எனில் அது மிகையாகாது. முந்தைய காலத்தில் பனை பணப்பயிராக விளங்கியது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர் பனைவெல்லம் காய்ச்சிய முறையினை இலக்கியங்கள் வழி அறியலாம். பனை ஓலையைப் பொத்துக் கட்டிய சுவடி அறிவு தந்ததால் அது புத்தகமாயிற்று. கார்த்திகை மாதம் தீபத் திருநாளில் சொக்கப்பனை கொளுத்தும் வழக்கம் இம்மரபின் மீட்டுருவாக்கமாகும். வேளாண்மைத் துறையில்

ஊடுபயிராகப் பனை மரம் விளங்கியதை பட்டினப்பாலை பின்வருமாறு உணர்த்துகிறது:

*கோள் தெங்கின் குலை வாழை*


*காய் கமுகின் கமழ் மஞ்சள்*

*இனமாவின் இனர்ப் பெண்ணை*

*முதற் சேம்பின் முறை இஞ்சி.*


**(பட்டினப்பாலை)**

பரதவப் பெண்கள் முந்நீர் அருந்தும் வழக்கில் நுங்கும் ஒன்றாக இருந்தது. சங்க இலக்கியக் காலத்தில் தாலப்பனையின் ஓலையில் மங்கல அணியான தாலி அணியும் வழக்கம் இருந்தது; தாலப்பனை ஓலையில் கணவனின் பேரும் குலமும் அடையாளமாக்கப்பட்டு அணிவிக்கப்படும். இவ்வாறு அணியும் முறையை நச்சினார்க்கினியர் தமது உரையில் "குத்துதல் அமைந்த தாலி" எனச் சுட்டியுள்ளார் (Nachinarkiniyar, commentary). இவ்வாறு மனித வாழ்க்கையின் பல்வேறு சூழல்களிலும் பனை பல்வேறு வகைகளில் தன் பங்களிப்பை வழங்கியுள்ளதை இலக்கியங்கள் வழி நன்கு அறியலாம்.




**படம் 2: கட்டுரையில் விவாதிக்கப்பட்ட சங்க இலக்கிய மேற்கோள்களின் கருப்பொருள் வாரியான பரவல் — C1: உணவு, C2: மருந்து/சடங்கு, C3: எல்லை/வேலி, C4: கட்டிடக்கலை, C5: பொருளாதாரம்/வணிகம், C6: இலக்கியம்/கலை (மடலேறுதல், விருந்தோம்பல்).**

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.30




**படம் 3: பனை மரம் தொடர்பான இலக்கிய/வரலாற்றுக் குறிப்புகளின் காலவரிசை — P1: கிமு 4 ஆம் நூற்றாண்டு (மெகஸ்தனிஸ்), P2: கிமு 1 ஆம் நூற்றாண்டு (அழகர்மலைக் கல்வெட்டு), P3: சங்க காலம், P4: கிபி 8 ஆம் நூற்றாண்டு (திவாகர நிகண்டு), P5: கிபி 2016 (தினமணி செய்தி).**

## 12. நிறைவுரை

தமிழ் நிலத்தோடும் தமிழர் மரபோடும் தொப்புள்கொடி உறவாகத் தொடர்ந்திருக்கும் பனை மரத்தின் தொடர்பினைச் சங்க இலக்கியச் சான்றுகள் வழி இக்கட்டுரை அறியத் தந்தது. மண்ணோடு விளையாடும் பனை, விவசாய மீட்சி வழி நம் நாட்டிற்கான வளத்தை மீட்டுத் தரும் திறன் கொண்டது; எனவே இனிவரும் காலங்களில் பனையோடு இணைந்து பயணிப்பதே நமக்கு உகந்தது. பனையின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு வள்ளுவப் பேராசான், "தினைத் துணை நன்றி செய்யினும் பனைத் துணையாக் கொள்வர் பயன் தெரிவர்" எனப் பதிவு செய்துள்ளார் (Thiruvalluvar, Thirukkural). பனை மரம் தன்னுடைய ஈடு இணையற்ற அர்ப்பணிப்பால், நமக்கே தெரியாமல் நம் வாழ்வோடு பின்னிப்பிணைந்திருப்பதனை எவரும் மறுக்க இயலாது. எனவே, பனையின் துணை நமக்கு என்றும் தேவை என்பதை உணர்ந்து, பனை மர மீட்சி குறித்துச் சிந்தித்துச் செயல்படுவோம்.

## Works Cited (துணை நின்ற நூல்கள்)

[1.] Arunachala Pulavar, Thirukudanthai. Thaalavaruttam. Publisher not indicated, n.d.

[2.] Balasubramaniam, Sirpi, and Neela Padmanabhan. Puthiya Nokkil Tamil Ilakkiya Varalaru. Vols. I–III, Sahitya Akademi, 2013.

[3.] Dinamani. "Pathaneer." Dinamani, 28 May 2016.

[4.] Kailasapathy, K. Pandai Tamilar Vaazhvum Vazhipaadum. Publisher not indicated, n.d.

[5.] Kanesan, Munaivar Ku. Puthiya Thalathil Sangka Ilakkiyam. Manimozhi Pathippagam, 2022.

[6.] Maanikkam, Va. Su. Pa. Tamil Kaadhal. Publisher not indicated, n.d.

[7.] Pillai, K. K. Thennindiya Varalaru. Publisher not indicated, n.d.

[8.] Rasamanickanar, Ma. Pathuppaattu Aaraaichi. Sahitya Akademi, 2012.

[9.] Rasamanickanar, Ma. Tamilar Naagarigamum Panpaadum. Publisher not indicated, n.d.

[10.] Sathakathalingam, S. Sangka Sevviyal Ilakkiyangal. Manivasakar Pathippagam, 2012.

[11.] Seenivasan. Sangka Ilakkiyathil Uvamaigal. Publisher not indicated, n.d.

[12.] Sundaram, Me. Sangka Kaalath Tamilarin Kadar Selavu. Publisher not indicated, n.d.

[13.] Tamil Annal. Puthiya Nokkil Tamil Ilakkiya Varalaru. Publisher not indicated, n.d.

[14.] Varadharajan, Mu. Pazhantamizh Ilakkiyathil Iyarkai. Publisher not indicated, n.d.

[15.] Varadharajan, Mu. Tamil Ilakkiya Varalaru. Sahitya Akademi, n.d.

[16.] Vellaivaranar, Ka. Sangka Kaalath Tamilar Vaazhvu. Publisher not indicated, n.d.

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*